# தேவனை எவ்வாறு சேவிப்பது என்று ஒரு தீர்க்கதரிசி இன்னொருவருக்குக் காட்டுகிறார்

**ஜெபம்:** "பரலோகத் தந்தையே, இயேசுவை நல்ல முறையில் பின்பற்ற சிறுவர்கள் பிற சிறுவர்களுக்கு உதவும்படியாக ஆய்த்தமாக இந்த பாடத்தை பயன்படுத்துவீராக."


சிறுவர்களின் தற்போதைய தேவைகளுக்கும் வட்டார பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற **செயல்பாட்டைத்** தெரிந்து கொள்க.



எலியா தீர்க்கத்தரிசி எலிசாவுக்கு தனது வல்லமையை மாற்றிக் கொடுக்கும் **கதையைக்** கூறுக (2 இராஜா. 2:1-15).

- முடிந்தால் இந்தக் கதையை மனப்பாடமாகக் கூற ஒரு பெரிய பிள்ளையை ஆயத்தம் செய்க.
- வயது குறைந்த ஒரு தீர்க்கதரிசிக்கு எலியா தனது பணியை எவ்வாறு ஒப்படைத்தார் என்ற முதற் கதையைக் கூறவும்.
- சிறுவர்களும் தாங்கள் கற்றவற்றை இவ்வாறு வேறு குழந்தைகளுக்கு கூற வேண்டும்.
- பின் வரும் கேள்விகளைக் கேட்கவும். பிள்ளைகள் சரியாகக் கூறவில்லை என்றால் மட்டுமே நீங்கள் கூறவும்.
- எலிசா தன் ஆசிரியர் மேல் எவ்வளவு கவனம் எடுத்துக் கொண்டான் *(பதில்: எலிசா தன் பழைய வை தனியாகப் போகவிடவில்லை).*
- தன் எஜமானன் தன்னை விட்டு போகப் போகிறான் என்பதை எலிசா அறிந்திருந்தானா? *(3).*
- எலியா தன் சீஷனிடம் கேட்ட கடைசி கேள்வி என்ன? *(9).*
- எலியாவிடம் இருந்து எலிசா எதைப் பெற்றுக் கொள்ள விரும்பினான்? *(9).*
- எலியா எவ்வாறு வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்? *(11).*
- தனது எஜமானன் எடுத்துக் கொள்ளப்பட்டதும் எலிசா எவ்வாறு உணர்ந்தான்? *(12).*
- எலிசா மிகவும் வருத்தம் அடைந்தான். பண்டைய இஸ்ரவேல் மக்கள் தங்கள் வருத்தத்தைக் காட்ட ஆடைகளைக் கிழித்துக் கொண்டனர்.

ஒரு பெரிய ரதத்தை **வரையவும்**. அக்கினி அதில் இருந்து புறப்படட்டும். இதைப் பார்த்துப் பிள்ளைகள் வரையட்டும். முடிந்தால் வண்ணமும் தீட்டட்டும். பெரிய பிள்ளைகள் வரைய அல்லது வர்ணம் தீட்ட சிறியவர்களுக்கு உதவட்டும்.



எலிசா மற்றும் எலியாவின் கதையை நாடகமாக்குக அல்லது அதனுடைய ஒரு பகுதியை நாடகம் ஆக்கி பெரியவர்களுக்கு நடித்துக் காட்டவும். சபைத் தலைவரோடு பேசி பெரியவர்களுக்கு நாடகத்தை நடித்துக் காட்ட ஏற்பாடு செய்யலாம். எலியாவுக்கு ஒரு மேலங்கியை ஆயத்தம் செய்யவும். (தோளின் மேல் போடும் ஒரு நீண்ட துணி). ஒத்திகை நேரமும் ஒரு கல்வி நேரமாக இருக்கட்டும்.

- **பெரிய பிள்ளைகள் எலியா, எலிசா** வேடங்களை ஏற்கட்டும்.
- **சிறிய பிள்ளைகள்** எலியாவின் சீஷர்கள் வேடங்களை ஏற்கட்டும்.

**கதை கூறுபவர் :** கதையின் முதல் பகுதியை கூறவும். (2 இராஜா 2:1-7) பின் கூற வேண்டியது. “எலியா தன் சீஷனான எலிசாவிடம் கூறுவதைக் கேளுங்கள்.”

**எலியா** : எலிசாவுடன் நடந்து கொண்டே கூறுவது, “எலிசா! நான் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது! நீ இங்கு இரு!”

**எலிசா** : “இல்லை! இறுதி வரை நான் உம்மோடு இருப்பேன்!”

**எலியாவின் சீஷர்கள்:** ஒரு பக்கமாக நிற்கின்றனர்.

**எலியா** : “எலிசா! இன்று நான் பரலோகம் செல்ல வேண்டும். யார் எனது வேலையைத் தொடர்ந்து பார்ப்பார்கள்?”

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாவது பகுதியைக் கூறுகிறார். (வச. 8-14). பின் கூற வேண்டியது, “எலியா, எலிசாவிடம் என்ன கூறுகிறான் என்று கேளுங்கள்!”

**எலியா** : துணியால் தரையில் அடிக்கவும். பின் கூற வேண்டியது, “தேவன் நதியைப் பிரித்தார். நாம் கடப்போம்!” (எலிசாவுடன் நடந்து) “நான் போவதற்கு முன் என்ன செய்ய வேண்டும்?”

**எலிசா** : “நீங்கள் போன பிறகு உங்கள் நல்ல வேலையை தொடர்ந்து செய்ய தேவ வல்லமையைப் பெற விரும்புகிறேன்.”

**எலியா** : “நான் பரலோகம் போவதை நீ பார்த்தாயானால், தேவன் உன் வேலை தொடர்ந்து நடக்க உதவி செய்வார்” (மேலங்கியை தரையில் எறிந்து விட்டு, ஒரு நாற்காலியின் மேல் ஏறி நின்று, வானத்தை நோக்கி கைகளை விரித்தல்).

**எலிசா** : “என் தகப்பனே! நீர் ஓர் அக்கினி ரதத்தில் மேலே போவதை நான் பார்க்கிறேன்.” சிறிது நேரம் மேல் நோக்கிப் பார்க்கவும். பின் அங்கியை எடுத்துக்கொண்டு கும்பலாக தீர்க்கதரிசிகள் நின்ற இடத்திற்கு வரவும். துணியால் தரையை அடிக்கவும்.

**எலியாவின் சீஷர்கள்:** எல்லோரும் சத்தம் போட்டு: “பாருங்கள்! அவர் தண்ணீரை இரண்டாகப் பிளந்து விட்டார்.” பின் தீர்க்கதரிசிகளில் ஒருவர் கூறுவது: “தேவ ஆவியானவர் எலியாவைப் போலவே இவருக்கும் வல்லமை அளித்துள்ளார்.”

**கதை கூறுபவர்:** உதவிய யாவருக்கும் நன்றி கூறவும்.

**பிள்ளைகள்** இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் எலியா-எலிசா கதையைக் குறித்த மேலேயுள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**பிள்ளைகளுக்கு விவரிக்க வேண்டியது:** நீண்ட நாட்களுக்கு முன்னர் இயேசு மனிதனாக வருவதற்கு முன்னர் தேவனுக்குக் கீழ்ப்படிய போதிப்பதின் மூலம் எலியா சீஷர்களை உருவாக்கினான். இப்போது தனக்குக் கீழப்படியும் சீஷர்களை உருவாக்குமாறு இயேசு நம்மிடம் கூறுகிறார். கேட்க வேண்டியவை:

- இயேசுவுக்குக் கீழ்ப்படிவதில் நாம் பிற பிள்ளைகளுக்கு எவ்விதத்தில் உதவ முடியும்?
- இயேசுவைப் பற்றி அறிந்து அவருக்கு சேவை செய்யும்படியாக உங்களுக்கு சகோதரன், சகோதரி அல்லது நண்பர்கள் உண்டா?

**வல்லமையின் அங்கியை பிறருக்கு அளிக்கவும்.**

- ஒரு மேலங்கியின் படத்தைப் பிள்ளைகளுக்காக வரையவும்.
- எலியா, எலிசாவைப் போல இருக்கும்படி பிள்ளைகளைக் கேட்கவும்.
- ‘எலியாவிடம்’ அங்கியின் படத்தை அளித்து, அது தேவ வல்லமையைக் குறிப்பதாக விளக்கம் அளிக்கவும். கூறுங்கள்: “இப்போது இயேசுவைப் பற்றி பிறருக்குக் கூறவும் அவருக்கு சேவை செய்யவும் உங்களுக்கு வல்லமை இருக்கிறது.”



**விளக்கம்:** “தேவ வல்லமையின் பேரில் நாம் சுயநலம் உள்ளவர்களாக இருக்கக் கூடாது. நாம் சீஷர்களை உருவாக்குகிறோம். அதற்கு அர்த்தம் என்னவென்றால் நாம் தேவ வல்லமையைப் பிற குழந்தைகளுக்கு அளிக்கிறோம் என்பதே.” பின் எலியாவாக நடிக்கும் குழந்தையிடம் அங்கியை ‘எலிசாவிடம்’ தரும்படியாகக் கூறவும்.

ï **பிள்ளைகள்** அங்கியின் படத்தை, அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களிடம் காட்டுவதற்காக வரையவும்.

- எலியா தனது அங்கியைத் தன் சீஷனாகிய எலிசாவிடம் கொடுத்தான். தேவ வல்லமையையும் நன்மையையும் இவ்வாறே நாமும் பிறருக்கு அளிக்க வேண்டும் என்பதையே இது சித்தரிக்கிறது.

**மனப்பாடம் :** யோவான் 20:21.

**சங்கீதம்:** 39:4, 5, 7 ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

குழந்தைகளுடன் சேர்ந்து **ஜெபிக்கவும்:**

“கர்த்தாவே, நீர் கட்டளை இட்டுள்ள எல்லாவற்றிற்கும் கீழ்ப்படியும் படியான சீஷர்களை உருவாக்க நீர் கூறினீர். நீர் உமது வார்த்தையையும், உமது ஆவியையும் கீழ்ப்படிய உதவும்படியாக எங்களுக்குத் தந்தீர். நல்ல சீஷர்களாக இருக்கும் படியாக எங்களுக்கு உதவும். பிறருக்கு இயேசுவைப் பற்றி கூறி அவர்களையும் நல்ல சீஷர்களாக்க உதவி செய்யவும்.”

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net